# மான்மின் செய்திகள்

# Manmin News

Manmin Ministries India 15D/41, Ponnankinaru St, Villivakkam, Chennai - 49, India. Ph: 044-26172471 Email: manminnewsasia@gmail.com

# பின்தொடர்ந்த அடையாளங்களினால் வசனம் உறுதிசெய்யப்பட்டது

## ரஷியா மற்றும் பின்லாந்தில் நடந்த போதகர்கள் கருத்தரங்கும் கைக்குட்டை கூட்டமும்



ஜூன் மாதத்தில் உயர்திரு. சூஜின் லீ (படம் 1) ரஷ்யா மற்றும் பின்லாந்தில் போதகர்கள் கருத்தரங்கையும் கைக்குட்டை கூட்டமும் நடத்தினார். படங்கள் 2–5: ஜீவனுள்ள வார்த்தைகளை பங்குபெற்ற போதகர்களும் விசுவாசிகளும் கேட்டு, வல்லமையான கிரியைகளை அனுபவித்தனர். மேலும் தேவனுடைய அன்பை உணர்ந்தவர்களாய் புதுப்பிக்கப்பட்டனர். படங்கள் 6,7: மான்மின் கலைகுழுவினர்கள் மற்றும் கைக்குட்டை கூட்டங்களில் சாட்சி பகிர்ந்தவர்கள். படங்கள் 8,9: பின்லாந்திலுள்ள ஆசீர்வாத திருச்சபையில் நடந்த கூட்டமும், துதி விழாவும்.

உயர்திரு. சூஜின் லீ, மான்மின் மத்திய சபையின் போதகர்கள் ஐக்கியத்தின் தலைவர், சுகமளிக்கும் கூட்டத்தையும் போதகர்கள் கருத்தரங்கையும் ரஷ்யா மற்றும் பின்லாந்தில் நடத்தும்படியாக அங்குள்ள போதகர்கள் மற்றும் விசுவாசிகளால் அவ்விடத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார். 13 நாட்கள் ஊழிய பயணத்திற்குப் பிறகு உயர்திரு. லீ அவர்கள் ஜூன் 23, 2015 அன்று திரும்ப வந்து சேர்ந்தார்.

ஜூன் 19 அன்று, அவர் ரஷ்யாவிலுள்ள செயிண்ட். பீட்டர்ஸ்பர்க் மான்மின் சபையில் (போதகர். பிளாடிமிர் ஒஷிப்போ, ரஷ்ய ஒருங்கிணைந்த இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த சபையின் தலைவர்) நடைபெற்ற போதகர்கள் கருத்தரங்கில் செய்தியளித்தார். கருத்தரங்கானது எஸ்டோனியா, பெலாரஸ் மற்றும் ரஷ்யாவின் தூரமான இடங்களிலிருந்து கிருபையை பெற்றுக்கொள்ள வாஞ்சையோடு வந்திருந்த அநேக போதகர்களுடன் நடந்தது. சிலர் 48 மணி நேரங்கள் ரயிலில் பயணப்பட்டு வந்திருந்தனர்.

கலைநிகழ்ச்சி செயற்குழுவின் துணை தலைவர் ரோஸ் ஹான் அவர்கள் ரஷ்ய மொழியில் தேவனை துதித்தார்கள். வல்லமை ஆராதனை நடன குழுவினர் ரஷ்ய பாடல்களுக்கு அழகான கலை நிகழ்ச்சிகளை வழங்கினார்கள். உயர்திரு. லீ தன்னுடைய பிரசங்கத்தில், அறிவர். ஜேராக் லீ அவர்களின் முக்கிய பிரசங்கமான ‘‘சிலுவையின் செய்தி’’ என்ற தலைப்பில் பேசினார். அவர் தேவன் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தை நாட்டினதின் நோக்கம், மனித பண்படுத்துதலின் அநாதி தீர்மானம், மேலும் இரட்சகருக்கான தகுதிகள் போன்றவற்றை விளக்கினார். பங்கு பெற்றவர்கள் ஏராளமான கிருபையை பெற்றுக் கொண்டனர். அவர்களில் ஒருவர், ‘‘நான் அறிவர். லீ அவர்களின் பரிசுத்தமாக்கும் சுவிசேஷத்தை குறித்து ஏற்கனவே கற்றிருக்கிறேன். ஆனால் இந்த கருத்தரங்கின் மூலம் நான் அறிந்தவைகளை என்னுடைய வாழ்க்கையில் எப்படி உபயோகிப்பது என்பதை உணர்ந்து கொண்டேன். இது தான் பரிசுத்தமாக்கும் சுவிசேஷத்தின் சாராம்சம் ஆகும்’’ என்று கூறினார்.

போதகர் மேக்சிம் டொமசவ், எஸ்டோனியாவிலுள்ள TBN பால்டியாவின் தலைவரும் பங்கு பெற்றார். அவர், அறிவர். ஜேராக் லீ அவர்களுடைய 2010 எஸ்டோனியா கூட்டத்திற்கு உதவி செய்தது முதற்கொண்டு தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றதாகவும், மேலும் அவருடைய தொலைக்காட்சி நேயர்கள் GCNனின் அறிவர்.ஜேராக் லீ அவர்களின் பிரசங்க நிகழ்ச்சிகளை விரும்புவதாகவும் கூறினார்.

ஜூன் 20 அன்று உயர்திரு. லீ செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்கின் மையத்தில் உள்ள கொலோஷியம் அரங்கத்தில் கைக்குட்டை (அப்போஸ்தலர் 19: 11–12) கூட்டத்தை நடத்தினார். உள்ளூர் துதி ஆராதனை குழுவினர் ஆவியில் நிறையும்படி செய்த துதிகளை ஏறெடுத்தனர். அதைத் தொடர்ந்து 2003 ரஷ்ய ஒருங்கிணைந்த படைமுயற்சி கூட்டத்தில் அறிவர். லீ அவர்களுடைய பிரசங்கத்தை மொழிபெயர்த்த போதகர் டிமிட்ரி பொலியகவ் வரவேற்பு செய்தியை வழங்கினார். ‘‘தேவனுடைய வல்லமை’’ என்ற DVD ஒளிபரப்பப்பட்டது. மேலும் மான்மின் கலைக் குழுவினர்கள் துதித்து நடனமாடினர். பங்கு பெற்றவர்கள் கிருபையினாலும், பரிசுத்த ஆவியானவரின் அக்கினியாலும் நிறைந்தனர்.

பிறகு, உயர்திரு. லீ ஆவிக்குரிய விசுவாசம், மாம்ச விசுவாசத்தைப் பற்றி பிரசங்கத்தை கொடுத்தார். பிரசங்கத்திற்கு பிறகு, அவர் வியாதியஸ்தர்களுக்காய் வல்லமையின் கைக்குட்டையை வைத்து ஜெபித்தார்; அநேக மக்கள் தங்களுடைய வியாதிகளிலிருந்து குணமானார்கள். ஏறக்குறைய 88 வயது நிறைந்த வயதான பெண்மணி ஒருவர் தன்னுடைய பார்வைத் திறனை இழந்திருந்தாள்; அவள் பார்வைத் திறன் அவளுடைய கண்களுக்கு முன்னே தடித்த பனி அடைத்திருப்பதைப் போன்று மங்கலாக மாறினது. ஆனால் உயர்திரு. லீயின் ஜெபத்திற்குப் பிறகு அவளுடைய பார்வைத்திறன் பிரகாசமாகி, அவள் மக்களை அடையாளங்காண தொடங்கினாள். அவள் மிகுந்த மகிழ்ச்சியோடு தன்னுடைய சுகத்தை சாட்சியாக அறிவித்தாள்.

தன்னுடைய சரீரத்தின் இடதுபுறத்தில் பக்கவாதத்தினால் நிறைந்த ஒரு நபர் தன்னுடைய இடது காலை சுலபமாய் அசைக்கத் துவங்கினார். மற்றொரு நபர் ஊன்றுகோல்களை தூக்கியெறிந்து நடந்தார். அநேக ஜனங்கள் மனஇறுக்கம், முதுகு வலி, எய்ட்ஸ் மற்றும் மற்ற வியாதிகளிலிருந்து சுகத்தைப் பெற்ற தங்களுடைய சாட்சிகளை பகிர்ந்தனர்.

ஜூன் 13 அன்று, ரஷ்யாவில் கருத்தரங்கையும், கூட்டத்தையும் நடத்துவதற்கு முன்பு உயர்திரு. லீ அவர்களுடன் ஊழியக் குழுவினர்கள் பின்லாந்திற்குச் சென்று துதி திருவிழாவையும், கைக்குட்டை கூட்டத்தையும் நடத்தினர். உள்ளூர் துதிஆராதனை குழுவினர் மற்றும் மான்மின் கலைகுழுவினரின் நிகழ்ச்சிகள் நடைபெற்றது. பிறகு, உயர்திரு. லீ ‘‘ஏன் இயேசு மட்டுமே நமது ஒரே இரட்சகர்?’’ என்ற பிரசங்கத்தை கொடுத்தார். அவர் பிரசங்கத்திற்குப் பிறகு நோயாளிகளுக்காக ஜெபித்தார். இடுப்பு இணைப்பு பக்கவாதத்தினால் தடியை சார்ந்து வாழ்ந்து வந்த ஒருவர் தடியின் துணையின்றி நடக்கத் தொடங்கினார். நடப்பதில் கஷ்டப்பட்ட இன்னும் சில ஜனங்கள் தங்களுடைய ஊன்றுகோல்களின்றி சுலபமாய் நடக்கத் தொடங்கினார்கள். மற்றவர்கள் கொடிதான நுரையீரல் வியாதி, மன இறுக்கம் மற்றும் அலர்ஜி போன்றவற்றிலிருந்து குணமாயினர்.

உயர்திரு. லீ ஜூன் 14 அன்று பின்லாந்திலுள்ள ஆசீர்வாத திருச்சபையிலும், ரஷ்யாவின் கட்ஷிமாவிலுள்ள ஜீவ அப்பம் திருச்சபையிலும் கூட்டத்தை நடத்தினார். இந்த கூட்டங்கள் திருச்சபை அங்கத்தினர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியையும், ஆவியின் நிறைவையும் தந்தது.

வல்லமையான தேவனுடைய கிரியைகளும், இயேசு கிறிஸ்துவும் பிரசங்கிக்கப்பட்டு வார்த்தையானது உறுதிசெய்யப்பட்டது (மாற்கு 16:20). சகல மகிமையையும் தேவனுக்கே செலுத்துவோம்.



தலைமை போதகர். அறிவர். ஜேராக் லீ

# தேவன் விரும்புகிற இருதயம்

“மாம்ச சிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்” (ரோமர் 8:6)

•••

தேவன் தம்முடைய பிரியமான பிள்ளைகள் சந்தோஷத்தை உணர வேண்டும் என விரும்புகிறார். அதனால் அவர் அவர்கள் மரணத்திற்கு வழி நடத்தும் மாம்ச சிந்தைகளை களைந்துப்போட்டு ஜீவனுக்கும் சமாதானத்திற்கும் வழிநடத்துகிற ஆவியின் சிந்தைகளைக் கொண்டிருக்க வேண்டும் என விரும்புகிறார். நற்குணத்தோடு இருக்கும் ஒருவர் எப்போதும் சமாதானம் மற்றும் மகிழ்ச்சியின் நிறைவோடிருக்கிறார். காரணம் அவனோ அல்லது அவளோ ஆவிக்குரிய சிந்தைகளை உடையவராய் இருப்பர். இப்போது ஆவியாயிருக்கிற தேவன் நாம் கொண்டிருக்க வேண்டும் என்று விரும்புகிற இதயத்தைக் குறித்து நாம் ஆழமாய் பார்ப்போம்.

## 1. தேவன் நாம் நம்முடைய ஆதாயத்தை அல்ல பிறருடையதை தேட வேண்டும் என விரும்புகிறார்

தேவன் நாம் கடன்களுக்காக உத்தரவாதம் கொடுப்பவர்களாக இருக்கக்கூடாது என்று நமக்குச் சொல்கிறார். காரணம் அது தவறாக போய் விடும்போது அவர்கள் ஒரு வேளை எதிரிகளாக மாறி வருத்தப்படலாம் (நீதிமொழிகள் 22:16). இருப்பினும், சில மக்கள் மற்றவர்களிடம் அவர்கள்மீது கரிசனைக் கொள்ளாமல் தங்களது கடன்களுக்காக உத்தரவாதமளிக்குமாறு கேட்பர். சிலர் மற்றவர்கள் வைத்திருக்கின்ற பொருட்களை விட சிறந்த பொருட்களை வைத்திருக்க வேண்டும் என விரும்புவர். அவர்களால் அதைக் கொண்டிருக்க முடியாவிட்டால், அவர்கள் அசௌகரிகமாக உணர்வர்; முகம் சுழித்து அல்லது வாக்குவாதம் செய்வர். எல்லாருமே சுய ஆதாயத்தை தேடுகின்றனர்.

ஆனால் சில ஜனங்கள் மற்றவர்களுடைய ஆதாயத்தை தேட விரும்பினர். ஆதியாகமம் 13:9ல் வாசிக்கிறோம், “... நீ இடதுபுறம் போனால், நான் வலதுபுறம் போகிறேன்; நீ வலதுபுறம் போனால், நான் இடதுபுறம் போகிறேன்.” ஆபிராம் (பிற்பாடு ஆபிரகாம்) மிகப் பெரும் ஆசீர்வாதத்தைப் பெற்றான். அவனுடைய ஆஸ்தியும் அவனுடைய சகோதரன் மகன் லோத்தின் ஆஸ்தியும் அவர்கள் இருவரும் ஒருமித்து வாசம் செய்யக் கூடாதபடிக்கு மிகப் பெரியதாயிருந்தது. பின், ஆபிராம் லோத்து சிறந்த நிலத்தைத் தேர்ந்தெடுக்கும்படி அனுமதித்தான். உண்மையில் தேர்ந்தெடுக்கும் உரிமை ஆபிரகாமுடையதுதான். ஆனால் அவன் அதை லோத்திற்கு விட்டுக் கொடுத்தான்.

லோத்து சிறந்த நிலத்தைத் தேர்ந்தெடுத்தபோது, ஆபிராம் சந்தோஷத்தையும் சமாதானத்தையும் உணர்ந்தான். இதுதான் உண்மையான நற்குணம். நாம் ஆபிராம் செய்ததுபோல சந்தோஷத்துடன் மற்றவர்களுடைய ஆதாயத்தைத் தேடுகிறோமா அல்லது நாம் நமது சுய ஆதாயத்தைத் தேடுகிறோமா என்பதை ஆராய்ந்துப் பார்க்க வேண்டும்.

ஒருவேளை நீங்கள், “நீ வலதை தெரிந்தெடுத்தால், நான் இடதுபுறம் போகிறேன்” என்று சொல்லலாம். ஆனால் உங்கள் இருதயத்தில் எது சிறப்பானதோ அதுதான் வேண்டும் என விரும்புகிறீர்களா? அல்லது மற்றவர்கள் சிறந்ததை தெரிந்தெடுத்தால் நீங்கள் அசௌகரிகமாக உணர்கிறீர்களா? உங்களுக்கு அப்படிப்பட்ட உணர்வுகள் இருந்தாலும்கூட, உங்களில் சிலர் நீங்கள் நற்குணசாலிகள் என்று நினைத்துக்கொண்டு இருப்பீர்கள். காரணம் நீங்கள் நஷ்டத்தை ஏற்றுக்கொண்டதால். இருப்பினும் நீங்கள் இன்னமும் உங்கள் சுய ஆதாயத்தைத்தான் தேடுகிறீர்கள். ஆனால் நீங்கள் அதை அறிந்து உணர்வதில்லை.

சில ஜனங்களுக்கு ‘இடதுபுறம்’ தேவையாய் இருக்கலாம். எனவே அவர்கள், “வலதுபுறம்தான் உங்களுக்குச் சிறந்ததென நான் நினைக்கிறேன். அதனால் நான் இடதுபுறத்தை தெரிந்துக்கொண்டு வலதுபுறம் உங்களுக்கு சிறந்ததென்ற காரணத்தால் அதை உங்களுக்காக விட்டுக் கொடுக்கிறேன்” என்று கூறுவர். கேட்பதற்கு நன்றாக தான் உள்ளது. ஆனால் அப்படிச் செய்பவர்கள் தங்களுக்கு விருப்பமானவற்றைத் தெரிந்துக்கொண்டு பிறரைக் கருதி அவர்களுக்கு வழிவிடுவது போல பாவனைச் செய்வர். கூடவே, சிலர் பணிந்துபோவர். ஆனால் அவர்கள், “அவன் எப்பொழுதும் தன் சுய ஆதாயத்தை தேடினாலும்கூட அந்த நபர் மற்றவர்களால் அங்கீகரிக்கப்பட்டு நேசிக்கப்படுகிறார். இன்னும் எத்தனை காலம் நான் நஷ்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்?” என்று நினைத்து அதைக் குறித்து உண்மையில் நன்கு உணரமாட்டார்கள். இது நற்குணத்தின் இருதயமல்ல.

தேவன் மனிதனுடைய உள்ளான இருதயத்தைப் பார்க்கிறார். நாம் பிறருக்கு சேவை செய்வது போல பாவனைச் செய்யக்கூடாது. ஆனால் மற்றவர்களுக்கு சேவை செய்யக்கூடிய இருதயம் நமக்கு இருக்க வேண்டும். அப்போது நாம் ஆவியாயிருக்கிற தேவனைப் பிரதிபலிக்க முடியும்.

## 2. தேவன் நாம் அவருடையதற்கு முன்னதாக நம்முடைய இருதயங்களின் விருப்பங்களை வைக்க விரும்புவதில்லை

யோவான் ஸ்நானகன் இரட்சகராய் வந்து கொண்டிருந்த இயேசுவின் ஊழியத்திற்காக வழியை ஆயத்தம் செய்தார். அவரது வாலிபம் முதல் உலகத்திலிருந்து வேறுபிரிக்கப்பட்ட வாழ்க்கையை வாழ்ந்தார். எந்த ஒரு உலக இன்பங்களையும் அவர் எடுத்துக் கொள்ளவில்லை. அவர் தேவனுடைய அழைப்பிற்காக காத்திருக்க வெட்டுக்கிளியையும், காட்டுத்தேனையும் உண்டு வனாந்திரத்தில் வாழ்ந்தார்.

குறித்த நேரம் வந்தபோது, யோவான் தம்முடைய ஊழியத்தைத் துவங்கினார். அநேக ஜனங்கள் அவரைப் பின்பற்றினார்கள். ஆனால் இயேசு தமது பொது ஊழியத்தை துவங்கியபொழுது, யோவானின் சீஷர்கள் பலர் இயேசுவிடம் சென்று அவரைப் பின்பற்றினார்கள். குறுகிய காலத்தில், யோவான் சிறையிலடைக்கப்பட்டார்.

யோவான் துக்கப்படவோ மனமுடைந்துப்போகவோ இல்லை. அவர், “நான் தேவனுடைய வேலைக்கு என் வாழ்வை முழுவதும் அர்ப்பணித்தேன். ஆனால் நான் இன்னும் வாலிபனாயிருக்கையிலேயே நான் இந்தச் சிறைச்சாலையில் சாகப்போகிறேனே என்று நினைக்கவில்லை.” மாறாக அவர், “நான் சிறுகவும் அவர் பெருகவும் வேண்டும்” என்று சொன்னார் (யோவான் 3:30). அவருடைய சீஷர்கள் இயேசுவிடம் சென்று அவரைப் பின்பற்றியபோது, அவர் முறுமுறுக்கவோ அல்லது அசௌகரிகமாக உணரவோ இல்லை. அதை செயல்வழி கிரமமாக கருதினார். தேவனுடைய அநாதி திட்டம் நிறைவேறுவதைக் கண்டு மகிழ்ந்தார்.

மத்தேயு 6:33ல் வாசிக்கிறோம், “முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்.” தன்னுடைய ஆசைகளைக் காட்டிலும் ஒருவர் தேவனுடைய ராஜ்ஜியத்தை முக்கியப்படுத்தினால், தேவன் அவருடைய இருதயத்தில் பிரியப்பட்டு அவருடைய ஆசைகளை சீக்கிரம் நிறைவேற்றுவார். ஆனால் சில மக்கள் தாங்கள் தேவனுடைய ராஜ்யத்தைத் தேடுகிறோம் என்று நினைத்துக் கொண்டிருந்தாலும், அவர்கள் சுய ஆதாயத்தைத் தேடுகிறார்கள். இது அவர்கள் தங்களுக்குப் பிடிக்காத காரியத்தை அவர்கள் செய்யாது, தங்களுக்குப் பிடித்தவற்றை மட்டுமே அவர்கள் செய்யும்போது நடக்கிறது.

உதாரணமாக, சில மனைவிமார்கள் தேவனுடைய வேலையை ஒரு சாக்காகப் பயன்படுத்தி ஒரு மனைவி மற்றும் ஒரு தாயாக தங்கள் கடமையை நிறைவேற்ற மாட்டார்கள். ஆனால் இது தேவனுடைய மகிமையை மூடிவிடுகிறது. இதுவும்கூட நம்முடையதற்கு முன்னதாக தேவனுடைய சித்தத்தை வைக்காமலிருத்தல் ஆகும். மாற்கு 7:11, “நீங்களோ, ஒருவன் தன் தகப்பனையாவது தாயையாவது நோக்கி: உனக்கு நான் செய்யத்தக்க உதவி எது உண்டோ, அதைக் கொர்பான் என்னும் காணிக்கையாகக் கொடுக்கிறேன்...” (அதாவது தேவனுக்குத் தருகிறேன்) என்று சொல்கிறது. நாம் தேவனுக்குக் கொடுப்பதால் பெற்றோர்களுக்கு கொடுக்க வேண்டாமென்றோ, பிள்ளைகளாக நம்முடைய கடமைகளை நிறைவேற்ற வேண்டாமென்றோ நமக்குத் தேவன் போதிக்கவில்லை. நாம் பெற்றோர்களுக்கும் தேவனுக்கும் சேவை செய்ய வேண்டுமென அவர் விரும்புகிறார். அதினால் நாம் குடும்பத்திலும் வேலை ஸ்தலத்திலும் தேவனை மகிமைப்படுத்த முடியும்.

சில மக்கள் தங்களது சுயத்திற்கு முன்னதாக தேவனுடைய சித்தத்தை வைத்துள்ளோம் என்று அவர்கள் நினைத்தாலும்கூட அவர்கள் தங்கள் சுய மகிமையையும், திருப்தியையுமே தேடுவர். அவர்களது உண்மையும் விசுவாசமும் அங்கீகரிக்கப்படாமல் போகும்போது அவர்கள் அசௌகரிகமாய் உணருவர். எதிர்பார்த்தபடி கனிகள் இல்லாமல் போகும்போது அவர்கள் மனம் விட்டுப் போய்விடுவர். மேலும், உள்ளூர அவர்கள் தேவனுக்கு நேரே சலிப்புத்தட்டுவர்.

நாம் மற்றதைக் காட்டிலும் அதிகமாய் தேவனுடைய சித்தத்தை மதித்தால், நாம் எந்த ஒரு சூழ்நிலையிலும் மனம்விட்டோ அல்லது மனமுடைந்ததாகவோ உணரமாட்டோம். “ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்” என்பது போல நாம் எப்போதும் களிகூர்ந்து நன்றி செலுத்த முடியும். தேவனுடைய வேலை நிறைவேற்றப்படுவதாலேயே நாம் சந்தோஷப்பட முடியும். இது நற்குணத்திலிருந்து வருகிற இருதயம்.

## 3. கடமையும் கட்டாயமுமாக அல்லது வழக்கமாக அல்ல நாம் எல்லாவற்றையும் கரிசனை மற்றும் சேவை உணர்வோடு செய்ய வேண்டுமென தேவன் விரும்புகிறார்

ஒரு தாயானவள் வீட்டு வேலை செய்கையில் அவள், “நான் ஒரு வேலைக்காரியோ அல்லது இயந்திரமோ அல்ல... இப்படிப்பட்ட வாழ்வு எப்போதுதான் முடியுமோ?” என்று புலம்புகிறாள். அதனால் பார்க்கப்படுகிற பகுதிகளை மட்டும் சுத்தம் செய்கிறாள். ஆகாரம் கடையில் வாங்கிக் கொடுக்கிறாள். பிள்ளைகள் அந்த ஆகாரத்தைக் குறித்து குறைகூறினால் அவர்களை அவள் வைகிறாள். மறுகரத்தில் அதே சூழ்நிலையில் சற்று வித்தியாசமாக, “மாலை உணவுக்கு அவர்களுக்கு எது மிகவும் பிடிக்கும்?” என்று கூறுகிற மற்றொரு தாய் இருக்கிறாள். அதனால் குடும்ப அங்கத்தினர்களை சந்தோஷப்படுத்த வேண்டுமென்ற ஆசையோடு அவள் துதிகளைப் பாடி வீட்டைச் சுத்தம் செய்கிறாள். அவள் கடமை உணர்ச்சியோடு அல்ல குடும்பத்தின்மீது கரிசனையோடு வீட்டு வேலைகளைச் செய்கிறாள். ஆண் அங்கத்தினர்களும் குடும்பம் மற்றும் வேலை ஸ்தலம் ஆகிய இரண்டிலும் தங்களது இருதயங்களைப் பரிசோதிக்க வேண்டும். இது வீட்டு வேலை, தொழில் மற்றும் தேவனுடைய வேலையிலும்கூட அப்பியாசிக்கப்படலாம்.

திருச்சபையின் நிகழ்ச்சிக்குப் பின்னர் நீங்கள் சுத்தம் செய்யும்போது, அனைவரது இருதய தூபமும் வித்தியாசமாக இருக்கும். நீங்கள் இப்படி நினைக்கலாம், “யாருமே என்னை உண்மையாக அங்கீகரிக்கவில்லை. அதனால் நான் அடுத்த முறை இதைச் செய்யப்போவதில்லை” அல்லது நீங்கள், “நான் இதைச் சீக்கிரமாய் முடித்துவிட்டு ஓய்வெடுப்பேன்” என்று நினைத்து வேலையை சரியாகச் செய்யாமல் போய்விடுவீர்கள் அல்லது நீங்கள் முறுமுறுக்காமல் வேலையை உண்மையாகச் செய்வீர்கள்.

ஆனால் அதைச் செய்கிறீர்கள், ஏனென்றால் அதைத்தான் நீங்கள் நீண்ட காலம் செய்து கொண்டு இருக்கிறீர்கள். இப்போது அதிலே நீங்கள் எந்தவொரு எண்ணத்தையும் வைக்காது அதைச் செய்கிறீர்கள். ஆனால் உண்மையில், பின்புள்ள மனப்பான்மை முன்புள்ள வகையான மக்களைவிட சிறந்ததுதான். ஆனால் நீங்கள் எல்லா வேலைகளையும் அன்போடும் சேவையோடும் செய்வீர்களானால், நீங்கள் உங்கள் செய்கையினால் மட்டுமல்லாது உங்கள் இருதய தூபத்தோடுகூட தன்னார்வ பணிகளைச் செய்வீர்கள். நீங்கள் “இது தேவனுடைய விலையேறப்பெற்ற சபை. நான் இந்த இடத்தை மிகவும் நன்றாக சுத்தம் செய்வேன். இது எல்லாம் சுத்தமும் ஒழுங்குமாய் இருக்கும் போது அங்கத்தினர்களால் பயன்படுத்தப்படும்” என்று நினைத்து சேவை செய்வீர்கள்.

நம்மை இரட்சித்த ஆண்டவருடைய கிருபைக்காகவும், தேவனுடைய மகா பெரிய அன்புக்காகவும் கைமாறு செலுத்துவதற்கு ஆசையோடு வாய்ப்பிற்காக நன்றியுள்ள இருதயத்தோடு நாம் வேலைச் செய்ய வேண்டும். எபேசியர் 6:6–7, “...மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக, மனப்பூர்வமாய் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள்” என்று சொல்கிறது. நீங்கள் ஆண்டவருக்கு செய்வதுபோல எல்லா நேரமும் கரிசனையோடும் சேவையோடும் எல்லாவற்றையும் நீங்கள் செய்ய ஊக்கப்படுத்துகிறேன்.

கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே, நீங்கள் தேவனை நேசித்தால் உங்கள் இருதயத்திலிருந்து பிறருடைய ஆதாயத்தைத் தேடி, தேவனுடைய காரியங்களை மற்ற எல்லாவற்றிலும் சந்தோஷமென கருதி, எல்லா சூழ்நிலைகளிலும் பிறரை கருத்தில் கொண்டு சேவை செய்யுமாறு உங்களை ஊக்கப்படுத்துகிறேன்.

நீங்கள் உங்கள் பெற்றோர்களுக்கு, பிள்ளைகளுக்கு, சிறியவர்களுக்கும்கூட சேவை செய்தால் கடினமான உங்கள் இருதயத்தின் பகுதி உடையும். உங்கள் இருதயம் நல்லதாக மாறும். அப்போது உங்களால் கிறிஸ்துவின் வாசனையை தரக்கூடும். இப்படி நீங்கள் செய்து ஆண்டவருடைய வருகையின்போது உங்கள் ஆவி ஆத்துமா சரீரத்தை குற்றமற்றதாக காத்துக் கொள்வீர்கள் என ஆண்டவருடைய நாமத்தினால் நான் ஜெபிக்கிறேன்.

### விசுவாசத்தின் அறிக்கை

1. மான்மின் மத்திய திருச்சபை வேதாகமம் தேவனால் உச்சரிக்கப்பட்ட பரிபூரணமும் பிழையற்றதுமான வார்த்தை என நம்புகிறது.
2. மான்மின் மத்திய திருச்சபை திரித்துவ தேவனின் ஐக்கியத்தையும் கிரியைகளையும் நம்புகிறது; பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்
3. மான்மின் மத்திய திருச்சபை, இயேசு கிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால் மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என நம்புகிறது.
4. மான்மின் மத்திய திருச்சபை இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நித்திய பரலோகத்தையும் நம்புகிறது.
5. மான்மின் மத்திய திருச்சபை அங்கத்தினர்கள் ஒவ்வொரு முறையும் அவர்கள் கூடிவரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை “அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணத்தின்” மூலமாக அறிக்கை செய்து, அதின் சொற்படியான உள்ளடக்கத்தை நம்புக்கின்றனர்.

“எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் [தேவன்]...” [அப். 17:25]
“அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை” [அப். 4:12]

# சத்தியத்திற்குரிய ஆத்துமாவின் கிரியை

**மனிதனுக்கு ஆத்துமா இருப்பதால் அவன் கண்ட, கேட்ட மற்றும் கற்றுக்கொண்ட காரியங்களை நினைவுகூர்ந்து அவைகளை திரும்ப அழைக்க முடிகிறது. ஆத்துமாவின் இயக்கத்தை பயன்படுத்தும்போது, தேவனுடைய பிள்ளைகள் அதை சத்தியத்தில் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் தான் அவர்கள் ஆவிக்குரிய மனிதர்களாக மாறமுடியும். பின்பு நம்முடைய ஆத்துமாக்கள் சத்தியத்தில் இருக்க நாம் என்ன செய்ய வேண்டும்?**

## 1 நாம் சத்தியத்தை நிலைத்தரமாக வைத்து எல்லாவற்றையும் பகுத்தறிய வேண்டும்

மக்கள் வித்தியாசமாக கற்று வித்தியாசமான சுற்றுப்புறங்களில் வளர்வதால் அவர்கள் வித்தியாசமான கலாச்சாரம், மதிப்பு மற்றும் நபருக்கு நபர் வித்தியாசமான கண்ணோட்டத்தை அடைகின்றனர். அதனால் சிலருக்கு சில காரியம் சரியாகவும், மற்றவர்களுக்கு அவர்களது மனச்சாட்சியின்படி அது தவறாகவும் காணப்படும். இந்த உலகில் உள்ள நீதியின் அளவுக்கோல் காலம், இடம் மற்றும் கலாச்சாரத்திற்கு ஏற்றபடி வித்தியாசமாக இருக்கிறது.

சரி மற்றும் தவறு என்பதை பகுத்தறிவதற்கு எது உண்மையான நிலைத்தரமாக உள்ளது?

தேவனில் விசுவாசிகளாக உள்ளோர் தேவனுடைய வார்த்தையை கற்றுக்கொண்டு சத்தியத்தின்படி எல்லாவற்றையும் பகுத்தறிய வேண்டும். அதனால், நாம் தொடர்தேர்ச்சியாக சத்தியத்தைக் கேட்டு, அதைக் கற்று, அதை நம்முடைய ஆவிக்குரிய போஜனமாக்க வேண்டும். நாம் வேதத்தை வாசித்து உலகில் நாம் கற்றுக்கொண்ட தவறான நிலைத்தரங்களை நாம் தூக்கி எறிய வேண்டும். மக்கள் சத்தியமென்று கருதுகிற சில காரியங்கள் வேதாகமத்தோடு ஒத்துப்போகிறது. ஆனால் அவைகளில் பல வேதாகமத்திற்கு எதிரானதாக காணப்படுகிறது.

உதாரணமாக, உலகில் உள்ள மக்கள் எதிராளிகளை பழித்தீர்ப்பது சரி என்று நினைக்கின்றனர். ஆனால் தேவனுடைய வார்த்தை நம்முடைய சத்துருக்களையும் நேசிக்க வேண்டும் என நமக்குச் சொல்கிறது. சில பெற்றோர்கள் சில வேண்டாத அழைப்புகள் வரும்போது தங்கள் பிள்ளைகளிடம் அவர்கள் வீட்டில் இல்லை எனச் சொல்ல சொல்கின்றனர். சிலர் மற்றவர்களுடையவைகளை பயன்படுத்துவர். ஆனால் திரும்பத்தர மாட்டார்கள் அல்லது அவர்களது அனுமதியின்றி அவர்கள் பயன்படுத்துவர். அவர்கள் அதை முக்கியமானதாகவும் எடுத்துக் கொள்ள மாட்டார்கள். ஆனால் தேவனுடைய வார்த்தையின் கண்ணோட்டத்தில் இப்படிப்பட்ட செயல்களெல்லாம் பொய்யும் திருட்டுமாக இருக்கின்றது.

தலைமுறைகள் மிகவும் தீமையுள்ளதாக மாற ஜனங்கள் தங்கள் சுய ஆதாயங்களை அதிகமாகத் தேடி சத்தியமற்றவைகளை பயிற்சி செய்கின்றனர். ஆனால் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று அவர்களுக்கே தெரியவில்லை. இதன் காரணம் அவர்கள் தங்கள் சொந்த நிலைத்தரத்தின்படி மற்றவர்களை நியாயந்தீர்த்துக் குற்றஞ்சாட்டுகின்றனர்.

## 2 நாம் எல்லாவற்றையும் சத்தியத்தின் கண்ணோட்டத்தில் உணர வேண்டும்

ஆத்துமா சத்தியத்தில் மட்டுமே கிரியை செய்வதற்கு, நாம் எல்லாவற்றையும் சத்தியத்தின் கண்ணோட்டத்தில் உணர வேண்டும். நாம் இப்போது எதை பாரமாக உணருகிறோம் என்பது நாம் முதலில் எப்படி உணர்ந்தோம் என்பதை சார்ந்திருக்கின்றது.

நிகழ்வாக, பொய்யில் கிரியை செய்கிற ஆத்துமாவோடு இருக்கிறவர்கள் பின்வருமாறு சிந்திப்பர்: அவர்கள் சுறுப்பாய் உள்ள யாரையாவது பார்க்கும்போது, அவர்கள், “இவன் சரியான படம் காண்பிப்பவன்” என்று நினைத்து அசௌகரிகம் கொண்டிருப்பர். மாறாக, சத்தியமுள்ள ஆத்துமாவின் இயக்கத்தைப் பயன்படுத்துபவர்கள், “அவர் தேவனுடைய ராஜ்ஜியத்திற்காக கடினமாக வேலை செய்கிற நபர், அவர் அருமையானவர்” என்று நினைப்பார்கள்.

ஆகையால், நாம் மற்றவர்களோடு பேசும்போது சேர்ந்து வேலை செய்யும்போது, நாம் நல்ல வழியில் நினைத்து உணர வேண்டும். நாம் நம்மைவிட குணாதிசயத்திலும் கலாச்சாரத்திலும் வித்தியாசமாயுள்ள ஜனங்களை சந்திக்கும்போது நாம், “அவர்களை எனக்குப் பிடிக்கவில்லை” என்று நினைத்தால் நமக்கு கெட்ட உணர்வு ஏற்பட்டு அது ஒருவேளை நீண்ட காலம் தங்கிவிடலாம். ஆனால் அவர்களது நிலையில் நாம் நம்மை வைத்து, அவர்களைப் புரிந்துக்கொள்ள முயற்சித்து நற்குணத்தின் வழியில் நாம் சிந்தித்தால், நாம் அவர்களுக்கு நேரே நல்லுணர்வை வைத்துக் கொள்ள முடியும்.

இது நாம் எல்லா நேரங்களிலும் நற்குணத்தில் சிந்திக்கவும் உணரவும் வேண்டும் என்பதாய் உள்ளது. இப்படிச் செய்வதற்கு நாம் எப்போதும் நம்மில் நற்குணத்தை பார்த்துக் கேட்டு சேமித்து வைக்க வேண்டும். உலகில் நம்முடைய வாழ்நாட்களிலேயே அநேக பொய்யான காரியங்களுக்கு நாம் வெளிப்படுத்தப்படுகிறபடியால் நாம் பொல்லாத தீமையான காரியங்களிலிருந்து நம்மை நாம் முற்றும் தடுத்துவிட முடியாது என்பது உண்மைதான். ஆனாலும் நாம் சத்தியத்தில் காக்கப்படுவதற்கேதுவாக நாம் தீமையான காரியங்களைப் பார்க்காமல் கேட்காமல் நமது நினைவில் வைக்காமலிருப்பது நமக்கு மிகவும் நல்லது. உங்களால் அவர்களைத் தவிர்க்க முடியவில்லை என்றால் நீங்கள் அவர்களை சத்தியம் மற்றும் நற்குணத்தின் வழியில் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

படத்தில் அடிதடி காட்சிகளை நீங்கள் பார்த்தீர்கள் என வைத்துக் கொள்வோம். சிலர், “இது நன்றாக உள்ளது” என நினைக்கலாம். ஆனால் நீங்கள் சத்தியத்தின் கண்ணோட்டத்தில், “அடிதடி மற்றவர்களுக்கு வேதனையை ஏற்படுத்தும். அதனால் நாம் மிகவும் ஜாக்கிரதையுள்ளவர்களாய் இருக்கவேண்டும்” என்று நினைப்பீர்கள். நீங்கள் ஏற்கனவே உங்கள் இருதயத்தில் சில காரியங்களை பொய்யான வழியில் வைத்திருந்தால் நீங்கள் அதை சத்தியமுள்ள உணர்வுகளாக மாற்றவும் அவைகளை நினைக்காமலும் இருக்க முயற்சிகளை ஏறெடுக்க வேண்டும்.

## 3 அனைத்து சூழ்நிலைகளிலும் நாம் மற்றவர்களுடைய நிலையில் நம்மை வைத்துப் பார்க்க வேண்டும்

நீங்கள் குறிப்பிட்ட சூழ்நிலையை உங்கள் சொந்த கண்ணோட்டத்துடன், உங்கள் அனுபவத்தின் அடிப்படையில் சிந்திக்கும் முறையில் ஏற்றுக் கொண்டால், அது ஒருவேளை தேவனுடைய பார்வையில் சரியற்ற ஆத்துமாவின் கிரியைக்கு நேராக வழிநடத்திவிடும். பின், நீங்கள் உங்கள் எண்ணத்தின்படி ஒருவர் சொல்லுகிற காரியத்தில் உங்கள் சொந்த எண்ணத்தை சேர்த்தோ அல்லது அதிலிருந்து சிலவற்றை தவிர்த்தோ விடுவீர்கள். அது ஒருவேளை நியாயந்தீர்த்தல், குற்றஞ்சாட்டுதல், தவறாகப் புரிந்துக்கொள்ளுதல் மற்றும் கசப்புணர்வைகூட ஏற்படுத்திவிடும்.

ஒருவர் உங்களிடம், நான் கும்காம் மலைக்கு சென்றிருந்தேன். அது மிகவும் அழகாயிருந்தது. நான் கண்ணீரே சிந்திவிட்டேன்” என்று சொல்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். சிலர் இவ்விதமாக நினைக்கலாம், “அவன் ஒரு மலையைப் பார்த்ததினால் கண்ணீர் சிந்தினான் என்று கூறுகிறானே? அவன் மிகைப்படுத்தி கூறுகிறான்!” இப்படி நினைப்பவர்கள் அழகான இயற்கைக் காட்சிகளால் ஒருபோதும் அவ்விதமாக அசைக்கப்பட்டிருக்க மாட்டார்கள். அதனால் அவர்கள் அவ்வாறு நினைக்கக்கூடும்.

வேலையிலிருந்து ஒரு கணவன் வீட்டிற்கு திரும்பி வருகிறான் என்று வைத்துக் கொள்வோம். அவர் தயவில்லாமல் தனது மனைவியின் கேள்விக்குப் பதில்கூட சொல்லவில்லையெனில், அவள் அசௌகரிகமாக உணர்ந்து, “இவன் எப்படி என்னை இப்படி நடத்தலாம்” என்று நினைக்கலாம். இருப்பினும், அவள் அவர் நிலையை உணர்ந்தால், “அவர் அசதியாயிருக்கக்கூடும். வேலைஸ்தலத்தில் அவருக்கு கஷ்டமாக இருந்திருக்கும்” என்று நினைக்கலாம். அவள் அவரைப் புரிந்துக் கொண்டு அவருக்கு ஆறுதல் அளிக்கலாம். மறுபுறத்தில் தனக்காக வெகுநேரம் காத்திருக்கும் மனைவியின் நிலைமையை யோசித்து, அவன் அவளை அசௌகரிகப்படுத்தாமல் இருக்கலாம். இவ்வாறு கணவனோ அல்லது மனைவியோ சத்தியத்திலும் மற்றவர்களது நிலையிலிருந்தும் நினைத்தால் சமாதானம் பராமரிக்கப்படும்.

நாம் மற்றவர்களுடைய குறைவுகளைக் கண்டறியும்போது, நாம் “ஏன் அந்த நபர் எப்போதுமே இவ்விதமாக நடந்துக்கொள்கிறார்? என்று நியாயந்தீர்த்து யோசிக்கக்கூடாது. மாறாக நாம், “அவர் அப்படி நடந்துக்கொள்ள காரணம் ஏதோ உண்டு” என நினைத்து அவரைப் புரிந்துக்கொள்ள வேண்டும். அவர்நிமித்தம் நாம் இழப்புகளைச் சந்தித்தாலும், நாம் அவர் நிலையிலிருந்து யோசித்து புரிந்துக் கொண்டு அவரை மனதில் தாங்க வேண்டும். இப்படிச் செய்வதால், நாம் மற்றவர்களுடைய குறைகளை மன்னித்து அவர்கள்மீது இரக்கம் கொண்டால், நாம் எல்லா மக்களோடும் சமாதானத்தை நாட முடியும்.

நாம் அவர்களது தவறுகளை நிபந்தனையில்லாமல் மூடி பொல்லாதவர்களை நல்லவர்கள் என்று சொல்ல வேண்டும் என்ற அர்த்தமல்ல என்பது உண்மைத்தான். ஆயினும் அவர்களது தீமையின் காரணத்தால் நாம் அவர்களை வெறுக்கவோ அல்லது அலட்சியம் செய்யவோ கூடாது. அவர்களது குறைகளுக்காக நாம் அவர்களைக் கடிந்துக்கொள்ளும்போது, நாம் அவைகளைக் குறித்து நன்கு விளக்கி அவர்கள் தங்கள் தவறுகளை உணர உதவ வேண்டும். அவர்களது ஆத்துமா செழிக்கும் என்ற உண்மையான அன்பு நம்பிக்கையோடே நமக்கு இருக்கவேண்டும்.

சில சமயம் சத்தியத்திற்குரிய ஆத்துமாவின் கிரியைகளை பயன்படுத்துவதில் உங்களுக்கு கஷ்டம் இருப்பதை நீங்கள் கண்டறியலாம். அப்படியானால், நீங்கள் உங்கள் சிந்தனைகளை, உணர்வுகளை, வார்த்தைகளை மற்றும் கிரியைகளை பரிசோதித்து சத்தியத்தில் யோசிப்பதற்கு கடினமாக முயற்சிக்க வேண்டும். மேலும், ஊக்கமான ஜெபத்தால் நீங்கள் தேவனிடத்திலிருந்து பெலனைப் பெற வேண்டும்.

# “நாங்கள் ஏப்ரல் 2015 நேபாள் நிலநடுக்கத்திலிருந்து பாதுகாக்கப்பட்டோம்”

ஏப்ரல் 25, 2015ல், 7.8 ரிக்டர் அளவுடைய சக்திவாய்ந்த ஒரு நிலநடுக்கம் நேபாளத்தை தாக்கியது. 1934 ஆம் ஆண்டிலிருந்து நேபாளத்தை தாக்கிய இயற்கை சீற்றத்திலேயே இதுதான் மிகவும் மோசமானது. அது அநேக ஜனங்களுடைய உயிரை வாங்கியது, மிகப் பெரிய பொருளாதார இழப்பையும் ஏற்படுத்தியது. நேபாள் மான்மின் பணித்தள மையம் நேபாளத்திலுள்ள லலீத்பூரில் அமைந்துள்ளது. அது ஜனத்தொகை மிகுதியாய் உள்ள நகரமாய் இருந்ததினால், அத்திருச்சபைக்கு மிகப் பெரிதான ஆபத்து ஏற்படும் வாய்ப்பிருந்தது. எனினும், அதோடுகூட அதின் 196 கிளை மற்றும் ஒருங்கிணைந்த சபைகள் அனைத்தும் பத்திரமாய் பாதுகாக்கப்பட்டன.



ஏப்ரல் 25, 2015 சனிக்கிழமை காலை 11:56 மணிக்கு நாங்கள் ஞாயிற்றுக்கிழமை ஆராதனைகளை சனிக்கிழமை நடத்துவதால், நாங்கள் சபையில்தான் இருந்தோம். அன்று காலை ஆராதனைக்கு பிறகு என்னுடைய சபையின் அங்கத்தினர்கள் மதிய உணவிற்காக கீழ்தளத்திற்குச் சென்றனர்.

மதியம் 12 மணிக்கு முன்பதாக 7.8 ரிக்டர் அளவுடைய ஒரு நிலநடுக்கம் எங்கள் பகுதியை தாக்கியது. அதன் தாக்கம் ஏறக்குறைய ஒரு மணி நேரமாக இருந்தது. என் அங்கத்தினர்களில் பெரும்பாலானோர் வெளியே சாலைக்குச் சென்றனர். நான் மூன்றாம் தளத்திலிருந்த அங்கத்தினர்களை பார்த்துவிட்டு அலுவலகம் இருந்த நான்காம் தளத்திற்குச் சென்றேன். அவ்விடத்தில் கீழே சாய்ந்திருந்த பொருட்களை சபை தலைவர்கள் ஒழுங்குப்படுத்தி கொண்டிருந்தனர். மேலும் சபை அங்கத்தினர்களுக்கு தேவைப்படும் பொருட்களை தேடிக்கொண்டிருந்தனர்.

ஆனால் நிலநடுக்கமானது வலுமையானது. ஆகவே நானும் சபை தலைவர்களும் தானியங்கி முறையில் செயல்படும்படி பதிவு செய்யப்பட்டிருந்த தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்களுடைய ஜெபத்தை பெற்றுக்கொண்டோம். பிறகு நான் அவர்களுடைய போதகராய் இருந்தும்கூட சில அங்கத்தினர்கள்மீது அசௌகரிய உணர்வோடு இருந்ததற்காகவும், சில தலைவர்களை குற்றப்படுத்தியதற்காகவும் மனந்திரும்பினேன். அந்த நேரம் என்னுடைய வாழ்க்கையில் கடைசி நேரமாய் இருக்கும் என்ற எண்ணம் என்னுடைய சிந்தையில் வந்தது. ஆனால் சீக்கிரத்தில் நான் என்னுடைய அங்கத்தினர்களை குறித்து நினைத்தேன். அவர்களுக்கு சிறிய காயமோ (அ) பிரச்சனையோ ஏற்பட்டால் நான் இவ்விடத்தில் நிற்க முடியாதே என்று நினைத்தேன். சாலையில் நின்று சபையை பார்த்துக் கொண்டிருந்த அங்கத்தினர்கள் சொன்னதை நான் பிறகு கேட்டேன். எங்கள் கட்டிடம் மற்ற கட்டிடங்களைக் காட்டிலும் மெல்லியதும் உயரமானதுமாக இருந்தது. அது சவாரி செய்வதைப் போன்று அதிகமாய் ஆடியது. அது பார்ப்பதற்கே மிகவும் அபாயகரமாய் இருந்ததால், அவர்கள் அழுது ஜெபித்தார்கள்.



போதகர் கிரேஸ் லீ, வயது 41,
மான்மின் பணித்தள மையம், நேபாள்

நான் மதியம் 2 மணிக்கு நடைபெறும் ஆராதனைக்குப் பதிலாக மதியம் 1 மணிக்கு ஒரு ஜெபக்கூட்டத்தை நடத்தினேன். நான் தேவனுக்கு முன்பதாக மனந்திரும்ப வேண்டிய காரியங்களை ஆராய்ந்து பார்க்கத் துவங்கினேன். என்னுடைய சபை அங்கத்தினர்களுடன் மனந்திரும்பினேன். ஜெபக்கூட்டத்திற்குப் பிறகு நான் பயந்த அங்கத்தினர்களை வீடுகளுக்கு போய்விடும்படி நடத்தினேன். நான் சபையில் இருக்க விரும்பிய அங்கத்தினர்களோடுகூட கட்டிடத்தின் முற்றத்தில் இருந்த உணவருந்தும் இடத்தில் ஜெபித்தேன். மாலை 5:45க்கு தானியேல் ஜெபக்கூடுகை ஆரம்பமானதால் நாங்கள் கட்டிடத்திற்குள் சென்றோம். நாங்கள் GCN தொலைக்காட்சி வழியாக சீயோலில் உள்ள மான்மின் மத்திய சபையில் நடைபெற்ற சிறப்பு தானியேல் ஜெபக் கூடுகையில் கலந்துகொண்டோம்.

அதற்கு அடுத்த நாளான ஞாயிற்றுக்கிழமை சிறப்பு தானியேல் ஜெபக்கூடுகையின் கடைசி நாளாய் இருந்தது. நாங்கள் GCN வழியாக தலைமை போதகருடைய ஆசீர்வாத ஜெபத்தை நேரடியாக பெற்றுக் கொண்டோம். அவர் நேபாள் பணித்தள மையத்தில் இருந்த எங்களுக்காக ஜெபித்தார். உண்மையில், 9 முதல் 12 ரிக்டர் அளவிலான ஒரு சக்திவாய்ந்த நிலநடுக்கம் நேபாளின் அனைத்து பகுதிகளையும் தாக்கும், பலத்த மழையும் பெய்யும் என்று வானிலை அறிக்கை வெளியானது. மேலும் பனிப்பாறை சரிவும்கூட உண்டாகும் என முன்னறிவிக்கப்பட்டது. ஆகவே, தாங்கள் உயிர் வாழ்வோம் என்ற நிச்சயம் ஒருவருக்கும் இல்லை.

எப்படியிருந்தாலும், நாங்கள் தலைமை போதகருடைய ஜெபத்தைப் பெற்றுக்கொண்டோம். என்னுடைய சபை அங்கத்தினர்கள் அவர்களுடைய வீடுகளில் ஒன்றும் சேதமடையாமலும், அவைகள் இடிந்து போகாமலும் இருந்ததை கண்டறிந்தனர். அவர்கள் அருகாமையில் இருந்த வீடுகளும், எதிரேயிருந்த வீடுகளும் தரையில் விழுந்துபோனபோதிலும், சபை அங்கத்தினர்களுடைய இடங்களும் மற்ற பகுதிகளில் இருந்த அவர்களுடைய உறவினர்களும் பாதுகாக்கப்பட்டனர். 196 கிளை மற்றும் ஒருங்கிணைந்த சபைகளெல்லாம் தேவனுடைய பாதுகாப்பின்கீழ் இருந்தன.

ஏப்ரல் 2015 நேபாள் நிலநடுக்கம் இந்து, புத்த கோவில்கள் போன்ற விக்கிரகாராதனைக்குரிய அநேக இடங்களை சூறையாடியது. ஆனால் மான்மின் அங்கத்தினர்கள் முழுவதும் பாதுகாக்கப்பட்டனர். அது ஆச்சரியமாக இருந்தது. நான் நேபாளத்தில் உள்ள ஆத்துமாக்களை இரட்சிக்க விரும்புகிற தேவனுடைய அன்பின் மகத்துவத்தையும், ஆழத்தையும் உணர முடிந்தது.

இந்த அழிவின்போது நான் எண்ணற்ற நேபாள ஜனங்கள் கோரமான மரணத்தை அனுபவித்ததைப் பார்த்தேன். அவர்கள் ஆண்டவரை சந்திக்காமல் இன்னும் விக்கிரகத்தை வணங்கி வருகின்றனர். உண்மையில் அவர்களுக்காக வருத்தமடைந்தேன். நான் பரிசுத்தமாக்கும் சுவிசேஷத்தையும், தேவனுடைய வல்லமையையும் நேபாள் தேசத்தில் பிரசங்கிப்பதற்கு ஆவிக்குரிய யுத்த வீராங்கனையாக மாற வேண்டும் என்ற தீர்மானம் எடுத்துள்ளேன். நான் இன்னும் அதிக ஆத்துமாக்களை இரட்சிக்கப் போராடுவேன். ஹலேலூயா!



## “என்னுடைய வீட்டில் ஒன்றும் சேதமடையவில்லை”

சுஷ்மிதா சில்வால், வயது 34

என்னுடைய வீட்டிற்கு முன்பதாக ஒரு குளம் இருக்கிறது. அதின் நடுவே ஒரு பழைய கோவில் இருந்தது. நான் ஜன்னலை திறக்கும்போதேல்லாம் அக்கோவில் கண்ணுக்குத் தெரியும். அந்த குறிப்பிட்ட நாளில் நான் தானியேல் ஜெபக் கூடுகைக்குப் பிறகு வீட்டிற்கு வந்தபோது மிகப்பெரிதான அந்தக் கோவில் நிலநடுக்கத்தால் தாக்கப்பட்டபடியால் குளத்திற்குள் மூழ்கிப் போயிருந்தது. எப்படியிருந்தாலும், என்னுடைய வீட்டிலே பாட்டில்கள், கண்ணாடி குடுவைகள் மற்றும் எரிவாயு பீப்பாய்களுக்கும்கூட ஒரு சேதமும் உண்டாகவில்லை. எவ்வளவு ஆச்சரியம் இது!



## “கோவில் மறைந்தது, என்னுடைய வேலைஸ்தலம் பாதுகாக்கப்பட்டது”

சஞ்சயா சாக்யா, வயது 26

நான் ஒரு துணிக்கடையில் வேலை செய்கிறேன். என்னுடைய கடைக்குக்கும் அருகாமையில் இருந்த கோவிலுக்கும் இடையே ஒரு சுவர் மட்டும்தான் இடைவெளியாக இருந்தது. அந்தப் பகுதியில் அநேக கோவில்கள் இருக்கிறது. நிலநடுக்கத்தால் என் கடைக்குப் பக்கத்திலிருந்த கோவில் தாக்கப்பட்டு, அழிந்து போனது. எப்படியிருந்தாலும், என்னுடைய வேலைஸ்தலம் பாதுகாப்பதாக இருந்தது. தேவன் மேய்ப்பருடைய மண்டலத்தை அனுபவிக்கும்படிக்கு என்னை நடத்தினார். நான் தேவனைப் போற்றுகிறேன். ஹலேலூயா!



## “என் மாமியாரின் மண்வீடு நிலநடுக்கத்திலும் உறுதியாய் நின்றது”

அபிகாயில் தமாங், வயது 37

என்னுடைய மாமியார் விஷம் நிறைந்த பூச்சிகொல்லி மருந்தை குடித்ததால் மரணத்தருவாயில் இருந்தார். ஆனால் அறிவர். லீ அவர்களுடைய ஜெபத்தைப் பெற்றுக்கொண்ட பிறகு அவள் உயிர்ப்பிக்கப்பட்டாள். அவள் ஒரு பழைய மண்ணாலான வீட்டில் வசிக்கிறாள். நிலநடுக்கம் தேசத்தை தாக்கியபோது அவள் மாத்திரம் வீட்டில் தனியாக இருந்தாள். அனைத்து வீடுகளும் நொறுங்கிப்போன அந்த நேரத்திலும் தலைமை போதகருடைய புகைப்படம் இருந்த அவளுடைய வீடு பாதுகாக்கப்பட்டது. என்னுடைய மாமியாரும் பாதுகாக்கப்பட்டார்கள்.

GCN Global Christian Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.gcntv.org
e-mail: gcntvindia@gmail.com

MIS Manmin International Seminary
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.manminseminary.org
e-mail: indiamis@gmail.com

Chennai Manmin Holiness Church
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: manminnewsasia@gmail.com

WCDN World Christian Doctors Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: wcdnindo@gmail.com